மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 514/2019

**2026–ம் ஆண்டு ஜீன் மாதம் 23ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : இமாம் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : நபீகான் சாயபு | வட்டம் | : வேப்பந்தட்டை |
| கிராமம் | : வாலிகண்டபுரம் | சமயம் | : |
| சாதி | : | வயது | : 72/2026 |

குறுக்கு விசாரணை :

(I) எனக்கு ஒரு பெண் மூன்று மகன்கள் உள்ளனர். முகமதுகான் என்பவர் எனது மகன். அவர் இந்து மதத்தை தழுவி இந்து பெண்ணை திருமணம் செய்து கொண்டு சுமார் 30 ஆண்டுகள் வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டார். வாலிகண்டபுரம் கிராம ச.எண். 312/3ல் 1 ஏக்கர் 27 செண்ட் நிலத்தை பூர்விக சொத்தை விற்று வந்த தொகையில் நான் கிரையம் பெற்றேன். நீங்கள் வாங்கிய கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகலை உங்கள் தரப்பு முதலாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளார்களா என்றால் சரிதான். உங்களது மகன் முகமதுகான் வேறு மதத்திற்கு மாறி வீட்டை விட்டு வெளியேறிய பின்னிட்டு தான் உங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை மற்ற இரண்டு மகன்களான பஜீர்கான், ஷபியுல்லாகான் என்பவர்கள் பெயரில் 11.11.1992ம் தேதி செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தீர்களா என்றால் சரிதான். உங்களுடைய மகன் பஜீர்கான் 2000 வருடம் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

ii) பஜிர்கான் மனைவி தான் இந்த வழக்கின் முதல் வாதி என்றால் சரிதான். முதல் வாதி தமீஜினிஷா என்றால் சரிதான். பஜிர்கானின் பிள்ளைகள் தான் 3 முதல் 6 வாதிகள் என்றால் சரிதான். தமீஜினிஷா குடும்பகட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டார் என்றால் சரிதான். பஜீர்கான் உயிருடன் இருக்கும்போதே ஷபியுல்லாகான் என்பவருக்கு வேறு பெண்ணை திருமணம் செய்து கொள்ள திருமண ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி திருமணத்திற்கு மூன்று நாள் முன்பாக பஜிர்கான் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதனால் ஷபியுல்லாகான் என்பவரது திருமணம் தடைபட்டது என்றால் சரிதான். அதன்பிறகு ஷபியுல்லாகான் 1ம் வாதி தமீஜினிஷாவை திருமணம் செய்து கொண்டாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

ஷபியுல்லாகான் 1ம் வாதி தமீஜினிஷா திருமணம் செய்து கொள்ள உங்களுக்கு உடன்பாடு இல்லை என்றால் சரிதான்.

iii) உங்களுக்கும் தமீஜினிஷாக்கு பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை கூட்டு குடும்பமாக தான் இருந்தோம். 2ம் வாதி ஷபியுல்லாகான் தான் 1ம் வாதியை திருமணம் செய்த பின்னிட்டு பெரம்பலூருக்கு குடி செய்துவிட்டார். அதன் பின்னிட்டு வாதிகளுக்கும் எங்களுக்கும் பேச்சுவார்த்தை இல்லை. வாலிகண்டபுரத்தில் எனது மனைவி கௌஸ்பீ என்பவருக்கு சொந்தமாக வீடு இருந்து என்றால் சரிதான். மேற்படி வாலிகண்டபுரத்தில் உள்ள வீட்டில் 1,3,4,5,6 வாதிகள் குடியிருந்தபோது உங்களுக்கும் அவர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அதுசம்பந்தமாக 1ம் வாதி புகார் அளித்தாரா என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை. 1,3,5,6 வாதிகள் மேற்படி வீட்டில் குடியிருப்பதை நீங்கள் இடையூறு செய்ததாக வழக்கு தாக்கல் செய்தார்களா என்றால் நீதிமன்றத்தில் இருந்து கடிதம் வந்தது நான் ஆஜரானேன், என்னை விசாரிக்கவில்லை.

iv) அந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்பாக 1ம் வாதி எனக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான். 1ம் வாதி மங்களமேடு காவல்நிலையத்தில் அளித்த புகாருக்கு பின்னிட்டு தான் 16.03.2015ம் தேதி பஜிர்கான் மற்றும் ஷபியுல்லாகான் என்பவருக்கு நீங்கள் எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை பி.சா.ஆ.4 மற்றும் பி.சா.ஆ.5 ன் படி ரத்து செய்தீர்கள் என்றால் சரிதான். பஜிர்கான் இறந்து 15 ஆண்டுகளுக்கு பின்னிட்டு தான் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்தீர்கள் என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரத்திற்கு பின்னிட்டு பெரம்பலூர் வருவாய் கோட்டாட்சியரிடம் நீங்கள் புகார் அளித்தீர்கள் என்றால் இல்லை சார் ஆட்சியளிடம் எனக்கு கடிதம் வந்தது நான் ஆஜரானேன். நீங்கள் உங்களை யாரும் பாராமரிக்கவில்லை என்று புகார் அளித்ததும் 1, 3, 4, 5, 6 வாதிகள் எனக்கு மாதம் ரூ.6,000/– தருவதாக ஒப்புக்கொண்டு சார் ஆட்சியர் அலுவலகத்தில் புகார் முடிக்கப்பட்டது என்றால் தவறு பணம் எதுவும் கொடுக்கவில்லை.

v) சக்கீம்ஷா என்பவருக்கு தாவா சொத்தை விற்பனை செய்வதற்காக கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் நான் கேள்விபட்டேன் வில்லங்கம் போட்டு பார்த்தேன். தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரத்திற்கு முன்பாக 06.02.2015ம்

தேதி வாதிகள் சக்கீம்ஷா என்பவரிடம் தாவா சொத்தை விற்பனை செய்ததற்காக கிரைய ஒப்பந்த பத்திரம் மேற்கொண்டுள்ளார்கள் மேற்படி விவரம் தெரிந்து நான் ஏற்படுத்திய தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்தேன் என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி கொண்ட பிறகு இன்று வரை என் பெயரில் தான் உள்ளது என்று பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

vi) அரசிடமிருந்து நான் நிவாரணம் வாங்கினேன் என்பது பொய் என்றால் சரியல்ல. நீங்கள் சுயமாக கிரையம் பெற்ற சொத்தை பொறுத்து உங்கள் மகன்களான பஜிர்கான் மற்றும் ஷபியுல்லாகான் ஆகியோருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்து அதை மேற்படி பஜிர்கான் மற்றும் ஷபியுல்லாகான் ஏற்றுக்கொண்டு அவர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டு தனித்த சுவாதினத்தில் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பஜிர்கான் இறந்தபின்னிட்டு அவருடைய சொத்திற்கு வாரிசு அடிப்படையில் 1, 3 முதல் 6 வாதிகள் பெயரில் வாரிசு முறைப்படி பட்டா மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. 1, 3 முதல் 6 வாதிகளுக்கு எனக்கும் விரோதம் ஏற்பட்டதால் நான் ஏற்படுத்தி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்தேன் என்றால் சரியல்ல. அவர்கள் என்னை கவனிக்கவில்லை அதனால்தான் ரத்து செய்தேன். நான் ஏற்படுத்தி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்று குறிப்பிட்டு பத்திரம் எழுதி கொடுத்துவிட்டு ஆவணத்திற்கு விரோதமாக ரத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தை அவர்களாகவே எழுதி கொண்டார்கள்.

vii) நான் தானசெட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதி கொடுத்து சுமார் 27 ஆண்டுகள் பின்னிட்டு அதை ரத்து செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தில் வாதிகள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் நானாகவே வழக்கறிஞர் மூலம் சார் பதிவாளர் அலுவலகம் சென்று ரத்து செய்துவிட்டேன். பஜிர்கான் இறந்த 15 ஆண்டுகளுக்கு பின்னிட்டு தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் பத்திரங்களை நானாக ரத்து செய்ய அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல். எனவே வாதிகளின் வழக்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over to the Witness and admitted by the Witness to be correct

District Munsif
– Cum-
Judicial Magistrate